International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# ஒன்றொழிப் பொதுச்சொல்லில் குறியீடு

**செ. வசந்தி**
(பதிவு எண்-23111244022015), முனைவர்பட்ட ஆய்வாளர்
சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி -7

**முனைவர் ப. அலிஸ் ராணி**, (S.D)
உதவிப் பேராசிரியர், நெறியாளர், தமிழ்த்துறை
சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி -7

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதன் தன் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்கவும், பிறருடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும் உதவுவது மொழி;. காலத்திற்கேற்ப நாகரீகம் வளர வளர பேச்சு வழக்கில் இருந்த மொழி எழுத்து வடிவம் பெற்றது. எழுத்து வடிவம் பெற்ற சொற்கள் பொருள் கொள்ளும் தன்மையில் வேறுபாடு உடையதாகக் காணப்படுகின்றன. இவை வெளிப் படையாகவும், குறிப்பாகவும் பொருளை உணர்த்துகின்றன. அனைவராலும் எளிதில் பொருள் கொள்ளும் தன்மையைப் பெற்றது வெளிப்படையான மொழிகளாகும். வெளிப் படையாகப் பொருளை உணர்த்தாமல், குறிப்பால் பொருள் உணர்த்தப்படும் மொழி குறிப்பு மொழியாகும். இக்குறிப்பு மொழியானது, ஒலிக்குறியீடாகவும், பொருள் குறியீடாகவும் அமைந்து பொருளை வெளிப்படுத்துகிறது. நன்னூலார் குறிப்புமொழிகளை ஒன்பது வகையாக வகைமைப்படுத்தியுள்ளார். இதில் ஒன்றான ஒன்றொழிப் பொதுச்சொல் குறியீடாக ஐங்குறுநூறு இலக்கியத்தில் இடம்பெறும் நிலையினை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கலைச்சொற்கள்**

Abstract-ஆய்வுச்சுருக்கம், Signifier - குறிப்பான், Signified - குறிப்பீடு, Code - குறியீடு, Reference words - குறிப்புச்சொற்கள், Explicit words - வெளிப்படையான சொற்கள்

எல்லாச் சொல்லும் பொருளை உணர்த்தும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். சொற்கள் பொருளை உணர்த்தும் இடத்தில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பொருளை உணர்த்துகின்றது என்று நன்னூலாரும் விளக்கியுள்ளார். நன்னூலார் குறிப்பு மொழியை ஒன்பது வகையாக வகைப்படுத்தியுள்ளர். இதில் ஒன்று ஒன்றொழிப்பொதுச்சொல் ஆகும்;. மேலைநாட்டு மொழி ஆராய்ச்சியாளரான சசூர் குறியீடானது ஒலிக்குறியீடு, பொருள்குறியீடு தோன்றும் என்று வரையறுத்துள்ளார். குறிப்பு மொழியான ஒன்றொழிப் பொதுச்சொல் ஒலிக்குறியீடாகவும், பொருள் குறியீடாகவும் ஐங்குறுநூறு இலக்கியத்தில் இடம் பெறும் நிலையினை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**ஒன்றொழிப்பொதுச்சொல்**

தமிழ்மொழியில் எழுத்துகள் சொல்லாகிப் பொருள் தருவதைப் பொதுவாக இருநிலைகளாகப் பிரிக்கலாம். முதல் நிலையில் தமிழில் சில எழுத்துகள் மட்டும் ஓர் எழுத்தாக தனித்து நின்று பொருள் தருகின்றன. மற்றொரு நிலையில் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்து பொருள் தருகின்றன. இவ்வகையான சொற்கள் காணப்பட்டாலும் பொருளை முன்னிலைப்படுத்தும் நிலை அடிப்படையில் இருவகையான மொழி நிலைகளை இலக்கணவியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். காலத்தால் முந்தைய இலக்கண ஆசிரியரான

தொல்காப்பியர்.

**தெரிபுவேறு நிலையலுங் குறிப்பில் தோன்றலும்**

**இருபாற் றென்ப பொருண்மை நிலையே**

(தொல்.சொல்.நூ.பா.157)

என்று சொல் வெளிப்படையாகவும், குறிப்பாகவும் பொருள் தரும் என்று வகைப்படுத்தியுள்ளார். இதனைச் சற்று விரிவாக நன்னூலார், குறிப்பாகவும், வெளிப் படையாகவும் பொருள் உணர்த்தும் இலக்கணங்களை ஒன்பது வகையாக வகைப்படுத்தியுள்ளார். அவை,

**ஒன்றொழிப்பொதுச்சொல் விகாரம் தகுதி**

**ஆகுபெயர் அன்மொழி வினைக்குறிப்பே**

**முதல்தொகை குறிப்போடு இன்ன பிறவும்**

**குறிப்பின் தருமொழி அல்லன வெளிப்படை**

(நன்.சொல்.நூ.பா.267)

இந்த எட்டு வகைகளில் முதலாவதாக அமைந்த ஒன்றொழிப் பொதுச்சொல் என்பது இருதிணை ஆண் பெண்ணுள் ஒன்றனை ஒழிக்கும் பொதுச்சொல் என்று நன்னூலார் வரையறுத்துள்ளார். நன்னுலாரை அடுத்து தோன்றிய இலக்கண ஆசிரியர்களும்; குறிப்பு மொழிகளில் ஒன்றாக ஒன்றொழிப் பொதுச் சொல்லைக் குறிப்பிட்டுள்ளனர். வீரமாமுனிவர் இயற்றிய தொன்னூல் விளக்கத்திலும் (நூ.பா.195), முத்து வீர உபாத்தியாயர் இயற்றிய முத்து வீரியத்திலும் (நூ.பா.18), ஒன்றொழிப்பொதுச்சொல் குறிப்பு மொழியாக இலக்கணத்தில் அமையப்பெறும் என்று குறிப்பிட்டுள்ளனர். இந்த ஒன்றொழிப் பொதுச் சொல்லானது பொருள் கொள்ளும் தன்மை குறிப்பு மொழியாகவும், குறியீடாக வும் அமைகின்றது.

**குறியீடு**

தொல்காப்பியர் சொல்லுக்கு, ஒலிப்பு வடிவமும், பொருள் வடிவமும் உள்ளதாக கருதியிருக்கிறார். ஆகவே, சொல்லதிகாரத் தின் பெயரியலில் முதல் சூத்திரத்தில் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று கூறிய பின்பு, இரண்டாவது சூத்திரத்தில்,

**பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்**

**சொல்லின் ஆகும் என்மனார் புலவர்**

(தொல்.சொல்.நூ.பா.156) என்கிறார்.

இதில் சொல் இரு தன்மைகளைக் கொண்டி ருப்பதாகவும், இவை சப்த வடிவமாகவும், பொருண்மை வடிவமாகவும் வெளிப்படும் என்பதைக் குறிப்பிட்டுள்ளார். மேலைநாட்டு மொழி பற்றிய ஆராய்ச்சியாளரான பெர்டினன்ட்-டி-சசூர் என்பவர் தொல்காப்பிய ரின் கருத்துப்படி சொற்கள் பொருள் கொள்ளும் நிலையைக் குறிப்பான் என்று ஒலிக்குறியீட்டையும், குறிப்பீடு என்று பொருள் குறியீடையும் அமைத்துள்ளார். நன்னூலார் குறிப்பிடும் ஒன்றொழிப்பொதுச்சொல்லானது, சசூரின் கோட்பாட்டின்படி குறியீடாக ஐங்குநூறு இலக்கியத்தில் இடம் பெற்று நிற்கிறது.

**ஐங்குறுநூறு இலக்கியத்தில் ஒன்றொழிப்பொதுச்சொல்லும், குறியீடும்**

ஐங்குறுநூற்றில் ஒன்றொழிப் பொதுச்சொல் ஒலிக்குறியீடாகவும், பொருள் குறியீடாகவும் நிற்கின்றது. ஒரு ஒன்றொழிப் பொதுச் சொல்லிற்கு ஒரு பொருள் குறியீடும், ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் குறியீடு;களும் உள்ளன. மேலும், எதிர்மறையான பொருள் தரும் பொருள் குறியீடுகளும் உள்ளன.

**1.பொருள் குறியீடு**

ஐங்குறுநூறு இலக்கியத்தின் மருதத்திணையில்

**வயலைச் செங்கொடி கள்வன் அறுக்கும்**

**கழனியுரன் மார்பு பலர்க்கு**

**இழை நெகிழ் செல்லல் ஆக்கும் அன்னாய்**

(ஐங்.25:2-4)

இதில் 'பலர்க்கு' என்ற சொல் ஆண், பெண் என இருபாலரையும் குறிக்கும் பொதுவான சொல்லாகும். இப்பாடலின் அடுத்த வரிகளில் அமைந்த 'இழை நெகிழ' என்ற சொல்லானது, அணிகலன் களை அணியும் பெண்களைக் குறிக்கும் சொல்லாக உள்ளது. ஆகவே இங்கு 'பலர்க்கு' என்ற சொல் பெண்பாற்பெயர் களான பரத்தையரையே குறிப்பாக உணர்த் தும் சொல்லாக வெளிப்பட்டுள்ளது. குறியீடு அடிப்படையில் இப்பாடலை நோக்கும் போது 'பலர்க்கு' என்ற சொல்லானது ஒலிக் குறியீடாக வெளிப்பட்டுள்ளது. மருத்திணைத் தலைவன் ஒரு பரத்தையோடு கூடியிருப்ப தால் அவள் இன்புற்று வாழ்கின்றாள். இன்னொரு பரத்தை தலைவன் தன்னைக் கைவிட்டுவிட்டு வேறொருவரோடு இணைந்தி ருப்பதை அறிந்து துன்பத்தை அனுபவிக்கி றாள் இவை பொருள் குறியீடாக அமைந்து உள்ளது.

தோழிக் குரைத்தப் பத்தில்

**முடமுதிர் மருதத்துப் பெருந்துறை**

**உடனாடு ஆயமொடு உற்ற சூளே**

(ஐங்.331:3-4)

என்ற பாடலில் 'ஆயம்' என்பது கூட்டம் என்ற பொதுச்சொல்லாகும். முந்தைய சீரோடு 'உடன் ஆடும் ஆயம்' என்ற சொல்லாகப் பொருள் உணரும் போது

பெண்களாகிய தோழியர் கூடி நீராடும் செயலைக் குறிக்கிறது இங்கு 'ஆயம்' என்ற சொல் இருத்திணைக்கும் உரிய பொதுவான சொல்லாக வந்தாலும் பெண்பாலை ஒழித்து ஆண்பாலாக ஒன்றொழிப் பொதுச் சொல்லாக வெளிப்பட்டுள்ளது. இதில் ஒலிக்குறியீடாக 'ஆயம்' என்ற சொல் வெளிப்பட்டுள்ளது. தலைமகன், முற்காலத்தில் தலைவியோடு புதுப்புனல் ஆட ஆயத்தோடு சென்று இன்புற்று மகிழ்ந்திருந்தான். தலைவன் சூளுரைத்த அச்சூளுரைக்கேற்ப வாழ்ந்தான். தலைவியை மறந்து பரத்தையோடு புதுப் புனல் ஆடி தலைவிக்குத் துன்பத்தை கொடுக்கும் அறப்பண்பு அற்றவனாக தலைவன் திகழ்கின்றான். சூளுரைத்த சொற் களுக்கு எதிராக வாழ்கின்றான் தலைவன். இவை பொருள் குறியீடாக ஐங்குறுநூறு இலக்கியத்தில் வெளிப் பட்டுள்ளது.

**2. ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் குறியீடு**

ஐங்குறுநூறு நெய்தல் திணையில், தாய்க்கு உரைத்த பத்து பகுதியில்

**அன்னை வாழி வேண்டு அன்னை**
**அவர்நாட்டுத்**
**துதிக்கால் அன்னம் துணை செத்து**
**மிதிக்கும்** (ஐங்.106:1-2)

என்ற பாடலில், 'அன்னம்' என்ற சொல்லா னது ஆண்பாலையும், பெண்பாலையும் குறிக்கும் பொதுச்சொல்லாகும். அடுத்து அமைந்த சொல் 'துணை செத்து மிதிக்கும்' என்ற வினைச்சொல் ஆண்பால் அன்னப் பறவையைக் குறிக்கும் சொல்லாகும். ஒன்றொழிப் பொதுச்சொல்லாக வெளிப் பட்டுள்ளது. இதில் ஒலிக்குறியீட்டுச் சொல் 'அன்னம்' ஆகும். இப்பாடலில் பொருள் குறியீட்டுச் சொல் இரண்டு உள்ளது. ஒன்று அன்னப்பறவையானது வெண்மையான நிறத்தை உடையது போலத் தலைவனும், தன்னுடைய நிலையிலிருந்து வேறுபடாமல் நிலைத்த தன்னையுடையவன் என்று வெளிப் பட்டுள்ளது. தலைவனோடு வாழும்போது தலைவி உயிர்வாழ்வாள் ஆகவே தலைவ னுக்குத் திருமணம் செய்து வைப்பதே சிறந்தது என வெளிப்பட்டுள்ளது. அடுத்த பொருள் குறியீடானது, தலைவிக்கு, வேறு ஆடவரைத் திருமணம் செய்துவைக்க முயற்சிப் பது உயிரற்ற சங்கினை விரும்புவதாக வெளிப்பட்டுள்ளது.

**3. எதிர்மறை பொருள் குறியீடு**

குறிஞ்சித் திணை பாடலில், கபிலர்

**பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும்**
**குடுமித் தலைய மன்ற**
**நெடுமலை நாடன் ஊந்த மாவே**

(ஐங்.202:3-4) எனக் குறிப்பிட்டுள்ள பாடலில் தலைமகன், தலைவியிடம் சொல்லிய சூளுரைக்கேற்ப வரைவிற்காக திரும்ப வந்துள்ள செய்தியைத் தோழி கூறும் விதமாக அமைந்துள்ளது. இதில் 'சிறுபிள்ளை' என்ற சொல் ஆண்பால், பெண்பால் என்ற இருபாலிற்கும் பொதுவான சொல்லாக வெளிப்பட்டுள்ளது. மேலும், ஒலிக்குறியீடாக 'நெடுமலை நாடன்' என்ற சொல்லானது அமைந்துள்ளது. இதற்கு பொருள் குறியீடா னது, தலைவியை பொருளீட்டி வந்து வரைவு செய்வதாகக் கூறினான். தலைவன் அந்த சூளுரையை தவறாது பின்பற்றி வாழும் உயர்ந்த குணமுடையவன். இதினிமித்தம் தலைவி இன்புறுவாள் என வெளிப்பட்டு உள்ளது. இதற்கு எதிர்மறையான பொருள் குறியீடானது, தலைவியை திருமண செய்வதற்கு காலம் தாழ்த்துவதால் தலைவி யின் துயரம் மலைக்குன்று போன்று நீண்ட துயரத்தினை அடைகின்ற நிலையை உணர்த்துகின்றது.

**தொகுப்புரை**

எட்டுத்தொகை தொகுப்பு நூல்களில் ஒன்றானது ஐங்குறுநூறு இலக்கியமாகும். இதில் நன்னூலார் குறிப்பிடும் ஒன்றொழிப் பொதுச் சொல் குறிப்பு மொழியாக பதினைந்து பாடல்களில் ஒன்றொழிப் பொதுச் சொல் வெளிப்பட்டுள்ளது. மேலை நாட்டு மொழியியல் அறிஞரான சசூர் குறிப்பிடும் குறியீடு ஐங்குறுநூறு இலக்கி யத்தில் ஒலிக்குறியீடாகவும், பொருள் குறியீடாகவும் பயின்று வந்துள்ளது தெளிவா கின்றது. ஒலிக்குறியீடு தனித்து நிற்கின்றது. பொருள் குறியீடு ஒரே பாடலில் ஒன்றும், ஒன்றுக்கு மேற்பட்டும், எதிர்மறை பொருள் அமைப்பு பொருள் குறியீகளாக ளாகவும் உள்ளன.

**துணைநூற்பட்டியல்**

1. ஐங்குறுநூறு மூலமும் உரையும்- ஔவை. துரைசாமிப் பிள்ளை- சாரதா பதிப்பகம்,ஜி-4, சாந்தி அடுக்கம், 3,ஸ்ரீ கிருக்ஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை.
2. காண்டிகையுரை- நன்னூல்- சொல்லதிகாரம்- மணிவாசகர் பதிப்பகம்- 2001.
3. தமிழவன் - தமிழும் குறியியலும்- உலகதமிழாராய்ச்சி சிறுவனம்- 1992.
4. சேனாவரையனார் – தொல்காப்பியம் - சொல்லதிகாரம்- சாரதா பதிப்பகம்-2016.